https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-2 April 2025

Published on 14, April-2025 ISSN: 3049-2688 (Online)

# பெண் கவிஞர்களின் கவிதைகளில் அகவாழ்வு

**சி.த.ல. ஸ்ரீகாந்த்**
த/பெ. லட்சுமணன்
கதவு எண் – 35, புதுத்தெரு புதுக்குப்பம், கடலூர்
ORCID ID: 0009-0009-0917-0528

## ABSTRACT

In contemporary modern Tamil literature, women-centric works are appearing in literary forms such as poetry, short story, novel etc. In literary works created by men, women are seen through men and women are portrayed as having a distorted mind. Away from such a male point of view, literary works based on a female point of view are appearing now. It can be seen that the language elements, experiences, thoughts, life evaluations, views, lyrics etc. of the literature created by women are different from the male point of view. This article explores the influence of women poets on society through their poems.

**Keywords**: Women's Liberation, Survival (or Existence/Coexistence), Patriarchal Society, Women's Creative Language

### முன்னுரை

தற்கால நவீனத் தமிழ் இலக்கியங்கள் என்னும் வகையில் கவிதை, சிறுகதை, புதினம் போன்ற இலக்கிய வடிவங்களில் பெண் சார்ந்த மையப் படைப்புகள் வெகுவாக வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஆண்கள் உருவாக்கிய இலக்கிய படைப்புகளில் பெண் ஆணின் மூலமாகவே பார்க்கப்பட்டிருக்கிறாள் என்பதோடு பெண் குறுகிய மனநிலை கொண்டவளாகவே படைப்புகளில் வெளிகாட்டப்படுகிறாள். இப்படிப்பட்ட ஆண் பார்வையில் இருந்து விலகி, பெண் பார்வையில் அமைந்த இலக்கிய படைப்புகள் தற்போது வெளிவந்து கொண்டிருக்கின்றன.

பெண்களால் உருவாக்கப்படுகின்ற இலக்கியங்களின் மொழிக் கூறுகள், அனுபவங்கள், சிந்தனைகள், வாழ்வியல் மதிப்பீடுகள், பார்வைகள், பாடுபொருள்கள் முதலியன ஆண்நோக்கு நிலையிலிருந்து வேறுபட்டு அமைந்திருப்பதைக் காண முடிகிறது.

அகம் / புறம் சார்ந்த அனுபவங்களே படைப்புக்கு உந்துதலாக அமைகின்றன. இலக்கியத்தின் வழியாக பெண்ணின் அக அனுபவங்களைப் பெண்ணே கடத்த முனைகிற போது, அப்படைப்பு மொழியானது பெண்ணின் அனுபவங்களை ஆழ வெளிப்படுத்துவதாகவே அமைகிறது.

பெண் உடலின் சுதந்திரம், பெண்ணுக்கான அடையாளம், பெண் உடல் அரசியல், பெண்ணுக்கான விடுதலை, பெண்ணுக்கான மீட்பு, ஆணாதிக்கம், வாழ்வியல் சூழலில் எதிர்கொள்ளும் பிரச்சனைகள், உரிமை, தனிமை, வெறுமை, பெண் உடல் சந்திக்கும் வன்முறை போன்ற காரணிகள் அகத்தில் ஏற்படுத்தியிருக்கும் தாக்கத்தைப் பெண் கவிஞர்களின் கவிதைகள் வழியாக வெளிப்படுத்தியிருப்பதை ஆய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

### கலைச்சொற்கள்

பெண் விடுதலை, அகவாழ்வு, ஆண்வழிச் சமூகம், பெண் படைப்புமொழி

### நவீன பெண் கவிஞர்கள்

நவீன பெண்கவிஞர்கள் பலர் பெண்ணியம், பெண் விடுதலை, பெண் சுதந்திரம் என்பவற்றுக்கப்பால் அழகியல், அரசியல், சமூக விடுதலை என பலவற்றை அடிப் படையாகக் கொண்டு எழுதி வருகின்றனர். அவர்களுள் கொற்றவை, அம்பை, கிருஷ்ணாங்கனி, தாமரை, கனிமொழி, மாலதி மைத்திரி, குட்டி ரேவதி, சக்தி ஜோதி, லீனா

மணிமேகலை, சுகிர்தராணி, தி. பரமேஸ்வரி, சல்மா, தமிழச்சி தங்க பாண்டியன், அனார், ஆண்டாள் பிரியதர்ஷினி, ரோஸ்லின், புதிய மாதவி, அ. வெண்ணிலா, மனுஷி என மிகப் பரந்த பரப்பளவை கவிதை உலகில் பதித்துள்ளனர்.

பெண்ணின் அகவாழ்வு அனுபவ உலகத்தை பெண்ணே வெளிப்படுத்துகிற போது அதில் பெண்ணின் உலகம் மட்டுமே தெரிவதில்லை. அதன் ஊடாக ஆண்வழிச் சமூக முறைமை களின் கோர உலகமும் அப்பட்டமாக வெளிப்படுகின்றன. அதனால் தான் தற்காலத்திய பெண் படைப்பாளிகள் பெண்ணின் அனுபவ அகவாழ்வு பதிவுகளை வெகுவாக மையப்படுத்தி வருகின்றனர்.

### கவிதைகளில் அகவாழ்வு

எளிய மனிதர்களின் உதடுகளில் தொடங்கி, நோபல் பரிசு மேடை வரை கவிதை உச்சரிக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்க தாகும். கவிதை, மொழியின் அர்த்தம் சார்ந்தது மட்டும் பயன்படுத்தப்படுவ தில்லை. மாறாக, மொழியின் வழியே மொழியால் கைக் கொள்ள முடியாத உணர்வுகளை, நிகழ்வு களை வெளிப்படுத்த முயல்கிறது. கவிதை படைப்பது, கவிதை யுடன் உரையாடுவது என்பது இன்மை யோடு அல்லது இருத்தலோடு கொள்ளும் உரையாடலே. ஆழ்மனதின் வெளிப்பாடே கவிதையை சாத்தியப்படுத்துகிறது.

### அகவுலகு / புறவுலகு

அகவுலகத்தின் உள்ளடக்கமே புறவுலக அனுபவத்தின் தன்மையை நிர்ணயிக்கிறது. புறவுலகம், சமூகம் என்பதெல்லாம் மனிதனின் அகவாழ்வை மையப்படுத்தியே இருக்கின்றது என்பது மறுக்கப்பட முடியாத உண்மை. எந்த அளவுக்கு புறநோக்காளராக ஒருவர் இருந்தாலும் அவருக்குள் ஓர் அகவுலகம் இருக்கத்தானே செய்கிறது. சாதாரணமாக சமூகம் என்பது புற உலக வாழ்க்கையாகவும் எண்ணம், உணர்ச்சிகள், மனப்பிம்பங்கள் இவைகளின் இயக்கங்கள் அகவுலக வாழ்க்கையாகவே கொள்ளப் படுகிறது. அகவுலகம், புறவுலகம் ஆகிய இரண்டும் எதிர்மறையானதாகவே கொள்ளப் படுகின்றன. ஆனால் இரண்டும் ஒன்றை யொன்று சார்ந்தே இருக்கின்றன.

### ஆண் / பெண் - சமூக முறைமை

பெண்ணும் ஆணும் சமூக உயிரிகளாக கருதப்பட்டாலும், பெண் வேறு தளத்திலும் -ஆண் வேறு தளத்திலும் முரண்படுத்தப் பட்டிருப்பதைக் காண முடிகிறது. சமூக வாழ்நிலையிலும் உடலியல் ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும், வாழ்க்கை முறையிலும், பண்பாட்டு நடத்தைகளிலும், இன்ன பிறநடவடிக்கைகளிலும் பெண்ணுக்கு வேறான அனுபவங்களும், ஆணுக்கு வேறான அனுபவங்களும் பெறப்படுகின்றன.

ஆண்வழிச் சமூகமுறைமையின் ஒடுக்குதலு க்கு ஆளாகியிருக்கும் பெண்ணின் அகவாழ்வு அனுபவம் என்பது ஒடுக்குண்ட மனதின் குரலாகவே அமைந்திருக்கிறது.

### பெண் கவிஞர்களின் கவிதைகளில் அகம்

பெண்ணில் உண்டாகிற இரணங்கள், வேதனைகள், அழுகைகள் அவற்றால் ஏற்படுகிற மௌனங்கள், தனிமை, வெறுமை, ஏமாற்றங்கள், ஏக்கங்கள் என எல்லாமே குருதியோடும், வியர்வையோடும் இழைந்து இழைந்து பருப்பொருளாய் இருந்து வெளிக் கிளம்பும் நுண்பொருளாய் பெண் உலகம் இருக்கிறது. இப்படி பரவிக் கிடக்கும் அகவாழ்வை பெண்ணின் மொழிக்குள் ஊடுருவும் இலகுவான ஆற்றலைக் கவிதை வடிவமே கொண்டிருக்கிறது. பெண்கள் தங்களின் அகம் சார்ந்த உலகோடு உறவாடு வதை பெண் கவிஞர்களின் கவிதைகள் வழி காணலாம்.

**அனார்**

**"என் உலகமே**
**துயர்களைத் தாங்கிய பாலைவனம்**
**வாழத் துடிக்கும் நானோ**
**விடியலை விழுங்கிய மலட்டு**
**இரவு போல் மௌனமாய் மல்லுக்**
**கட்டுகிறேன்"** (ஓவியம் வரையாத தூரிகை)

அனாரின் இக்கவிதை தனிமையின் விரக்தியை வெளிக்காட்டி நின்றாலும், காலத்தைத் தாண்டிய ஒரு வெளியில் தன் கனவுகளுக்காக வாழத்துடிக்கும் மன அழுத்தத்தை வெளிப்படுத்தி இருக்கிறார். பாலைவனம், விடியல் விழுங்கிய மலட்டு இரவு என படிமக்காட்சிகளை கொண்டு தன் தனிமையின் தீவிரத்தை இக்கவிதை கொண்டிருப்பதைக் காணலாம்.

**சல்மா**

**"நான் அனுமதிக்கத்தான் வேண்டுமா**
**என் சுவாசம்**
**நான் அன்றி நிகழ்வதை**
**.........................**
**எனக்காக நிகழும் அவை**
**நான் இல்லாமலேயே நடந்து விடுகிறது"**
(ஒரு மாலையும் இன்னொரு மாலையும்)

என முடிகிறது இத்தாம்பத்திய கவிதை. சுய பங்களிப்பின்மையோடு அவலச் சுவை மிகுந்து இங்கு தாம்பத்தியம் காணப் படுவதை குறிப்பிடுகிறார். தன் இருத்தலின் புறக்கணிப்பை, மனக்குமுறலை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது இக்கவிதை.

**சுகிர்தராணி**

**"கிழிந்த தேகத்தை**

***நேர்ப்படுத்திக்கொண்டு***
***நிமிர்கிறேன் மறுபடியும்***
***உறுப்புக் கிளைகள் ஒடிந்து விழும் படியாக***
***வந்தமர்கிறது ஓர் உருவ பூதம்***
***..................................................***
***முடிவின் பிந்தைய கணத்தில்***
***ரத்தம் தோய்ந்த ஆடையை***
***துவைத்து போடுகிறாள்***
***பிரபஞ்சம் எங்கும் கலவி வாசனை"***

*(இரவு மிருகம், ப. 30)*

*என ஆணாதிக்க மிருகங்கள் காமத்தின் வால் பிடித்து பித்தேரி திரிந்தும், அது பெண்ணின் மனவலி எதையும் பாராமல் தேகத்தை கிழித்துப் போட்டு எச்சிலையும், காம நீரையும் சிந்திவிட்டு புணர்வு நிமித்தமாக மதர்த்து திரிவதை "கலவி வாசனை" என்னும் கவிதை மூலம் தனது வலியை வெளிப்படுத்தி சமூக மனங்களை கிழிக்கிறார் சுகர்தராணி.*

## குட்டி ரேவதி

***"தனிமையில் மட்டும்***
***கசியும் உள் தனிமை***
***பெருங்கடலாய் உருவெடுத்து***
***.......................................***
***பாராமல் விடும் கண்ணீர்த் துளிகளை***
***ஏந்த வலுவுண்டோ***
***உன் கைகளுக்கு..?"*** *(தனிமையின் ஆயிரம் இறக்கைகள்)*

*என தனிமையில் சுரக்கும் எண்ணங்களின் ஒரு துளியும், அது தன்னுள் சுரந்தாலும், பெருங்கடலென பல்லாயிரம் ஆண்டுகளாக பிற மனித வாசனையே நிறைந்து கிடப்பதை கண்டு அந்தக் கண்ணீர்த் துளியை, ஆணாதிக்கம் இறுகிக் கிடக்கும் இச்சமூகத்தில் இதை தாங்க எவருக்கு சக்தி உண்டு என்று கேட்டு இருக்கிறார். பதில்கள் கூட அநேகமாக மௌனமாய் தானே இருக் கிறது என்பதையும் வலியுறுத்தியிருக்கிறார்.*

## அ. வெண்ணிலா

***"விஷப் பாம்பொன்று என் மீதேறி***
***நிதானமாக கடந்து போகிறது***
***புரிதலற்ற உன் பார்வைகளை***
***சந்திக்கும் பொழுதெல்லாம்"***

*(ஆதியில் சொற்கள் இருந்தன, ப. 30)*

*எனக் குறிப்பிடுகிறார். புரிதலற்று போகும் நிலையில் வாழ்வு மிகக் கொடுமையானதாக மாறி விடுவதுடன், பெரும் துயர வெளியை தன் மனதிற்குள் உருவாக்கி விடுகிறது என்கிறார்.*

*அகநிலையிலும் புறநிலையிலும் ஒவ்வொரு பெண்ணும் ஒவ்வொரு விதமான அனுபவங் களை பெற்றிருப்பார். இங்கு பெண்ணின் அகவாழ்வு என்பது எல்லாப் பெண்களுக் குமே ஒரே மாதிரியாக அமைந்திருப்ப தில்லை. சாதி / மத / வர்க்க / இன / நாடு / நிற அடிப்படையிலான வேறுபாடுகளைச் சமூக அமைப்பு கொண்டிருப்பதால், பெண்களும் அவ்வாறான அடிப்படையில் வேறுபட்ட அகவாழ்வு அனுபவங்களை பெற்றவர்களாகவே உள்ளனர்.*

## முடிவுரை

*அகவுலகம் என்று கொள்ளப்படுகிற எண்ணங்கள், உணர்ச்சிகள், கருத்துருவங்கள், வாழ்க்கை பற்றியக் கணிப்புகள், மனோ பாவம், விருப்பு, வெறுப்பு, அபிப்ராயங்கள் இவைதான் புறவுலக அனுபவத்தின் தன்மையை, சாரத்தை, சுவையை நிர்ணயிக் கின்றன.*

*வாழ்வின் அன்றாட நிகழ்வுகளையும் அவை பெண்களின் மனதில் ஆழப்பதிந்து தாக்கத்தை ஏற்படுத்துவதையும் பெண் கவிஞர்களின் கவிதைகள் வெளிப்படுத்து கின்றது என்பதை இக்கட்டுரை வழி அறிய முடிகிறது. பெண்ணின் அக உணர்வுகளை அப்பட்டமாகக் கவிதைகளாக்கி அனைவரை யும் சிந்திக்க வைப்பதோடு இல்லாமல் மாற்றம் வேண்டும் என்ற உந்துதலை நமக்குள் விதைப்பதாகவே இருக்கிறது.*

## துணைநூற்பட்டியல்

1. *மகாராசன், (2010) பெண் மொழி இயங்கியல், தோழமை வெளியீடு, சென்னை, இந்தியா*
2. *ஆனந்த், (2009) கவிதை என்னும் வாள்வீச்சு, காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் (பி) லிமிடெட்., நாகர்கோவில், இந்தியா*
3. *எஸ். ராமகிருஷ்ணன், (2019) கவிதையின் கையசைப்பு, தேசாந்திரி பதிப்பகம், சென்னை, இந்தியா*
4. *இரா. பிரேமா, (2000) பெண்ணியம், பாரி புத்தகப் பண்ணை, சென்னை, இந்தியா*
5. *அனார், (2004) ஓவியம் வரையாத தூரிகை, மூன்றாவது மனிதன் பதிப்பகம், கொழும்பு, இலங்கை*
6. *சல்மா, (2014), ஒரு மாலையும் இன்னொரு மாலையும், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், இந்தியா*
7. *சுகிர்தராணி, (2007), இரவு மிருகம், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், இந்தியா*
8. *குட்டி ரேவதி, (2010), தனிமையின் ஆயிரம் இறக்கைகள், அடையாளம் பதிப்பகம், புத்தாநத்தம், இந்தியா*
9. *அ. வெண்ணிலா, (2008), ஆதியில் சொற்கள் இருந்தன, அன்பு நிலா பதிப்பகம், வந்தவாசி, இந்தியா.*
10. *சுகந்தி சுப்ரமணியன், மீண்டெழுதலின் ரகசியம், தமிழினி பதிப்பகம், சென்னை, இந்தியா.*